[2013 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பழுதடைந்திருக்கிறது, புதிய கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து, அப்படிப் பழுதடைந்திருந்தால் அது சரி செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 341, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

341—

நியாய விலைக் கடைக் கட்டடம்

***3685—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நவ்வலடி ஊராட்சி, வள்ளான்விளையிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரம் ஒன்றியம், நவ்வலடி ஊராட்சியிலுள்ள, வள்ளான்விளை பகுதிநேர நியாய விலைக் கடை 99 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இப்பகுதிநேரக் கடை புலிமான்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடைக்குக் கூடங்குளம் அணுமின் திட்ட உதவியுடன்

2013 ஏப்ரல் 29]

அரசு தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் 2012-2013 ஆம் ஆண்டின்படி ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை 21-8-2012-ல் வழங்கப்பட்டு, கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டு நாளது தேதியில், தளமட்டம் வரை கட்டுமானப் பணிகள் முடிந்துள்ளன. அதிவிரைவிலே பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயாக, தமிழாக, தமிழகத்தின் தவப் பயனாக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டைத் தாய்நாட்டின் தலைநாடாய் செய்வதற்கு தன்னையே தந்துழைக்கும் எங்கள் அன்னைத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) கோடி இல்லங்களின் அறையில் குடியிருக்கும் எங்கள் வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) கன்னித் தமிழகத்தை கண் எனக் காக்கின்ற காவியமே! (மேசையைத் தட்டும் ஒலி) பாராளப் பிறந்த தாரகை உள்ளமே, பரிவே, பாசப் பெட்டகமே, தாயே! தாய்மையின் உறைவிடமே! தமிழ் இனத்தின் வரைபடமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, எனது தொகுதி மக்களின் கோரிக்கைகளை அடுக்கடுக்காய் நிறைவேற்றித் தரும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியின் குட்டம் பஞ்சாயத்திலும், வெம்பனக்குடி, குஞ்சன்விளை ஆகிய இரு கிராமங்களிலும் நியாய விலைக்கடைக்கும் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 160 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அவற்றில் 83 கடைகள் முழுநேரக் கடைகள், 77 கடைகள் பகுதிநேரக் கடைகள். இவற்றில் வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை மொத்தம் 8 கடைகள் மட்டுமே. அதுவும் குறிப்பாக, நாங்குநேரி, ராதாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் 4 கடைகள் வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன. அதேபோன்று, பணகுடி ஸ்டோர் நடத்துகிற 4 முழுநேரக் கடைகள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. நம்முடைய கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டருக்கும் உள்ளே இருந்தால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் 500 கோடி ரூபாய் அந்த கூடங்குளம் அணுமின் நிலையப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்காக ஒதுக்கியிருக்கிற நிதி, இதுபோன்ற கடைகள் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட 8 கடைகளும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இந்த 8 கடைகளும் வள்ளியூர் பேரூராட்சியில் 4 கடைகள், பணகுடி பேரூராட்சியில் 4 கடைகள். ஆக, இவை அனைத்துமே 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றன. எனவே, மேற்கண்ட கடைகளுக்கு அந்த நிதியிலிருந்து கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரு பெற்று, மாவட்ட ஊராட்சி முகமை நிதியிலிருந்து கட்டுவதற்கான வாய்ப்புள்ளதா என்பதை அறிந்து, நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. எஸ். மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு கிராமங்களும் அந்த அணுமின் நிலைய நிதியிலிருந்து கட்டுவதற்கு உள்ள பகுதியில்தான் இருக்கின்றன. எனவே, நீங்கள் அதைப் பரிசீலித்து கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அது அரசு கட்டடத்தில்தான் இயங்குகிறது. எனவே, அரசுக் கட்டடத்தில் இயங்குகிற கடைகள்தான் அங்கே இருக்கின்றன. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறமாதிரி வாடகைக் கட்டடத்திலோ அல்லது வேறு கட்டடத்திலோ அது இயங்குமானால், அந்த நிதியில் கட்டிக்கொடுப்பதற்காக மாண்புமிகு அம்மாவுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

342—

இணைப்புச் சாலை

***3826—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பின்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, பாக்கம்-புலிக்குறடு சாலையிலிருந்து தாதங்குப்பம் வரை இணைப்புச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புலிக்குறடு சாலையை பாக்கம் முதல் தாதங்குப்பம் வரை இணைப்புச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.